DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

| CC No. | 164/2022 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| Name | Pw–1 ராஜேந்திரன் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 14.07.2025 |

**எதிரிகள் இருவரும் ஆஜர் இல்லை. எதிரிதரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

முதல் விசாரணை

நான், பவானி மேற்கு தெருவில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். .கடந்த 15.10.2020ஆம் தேதியன்று மதியம் சுமார் 2.00 மணிக்கு எனது கருப்பு நிற Splendor பைக்கை எனது வீட்டிற்கு அடுத்த தெருவில் உள்ள எனது அண்ணன் யுவராஜ் என்பவரின் வீட்டிற்கு முன்னால் நிறுத்திவிட்டு, நானும் எனது அண்ணன் யுவராஜும் வெளியில் சென்று விட்டோம். பின்னர் அன்றைய தினம் மதியம் 4:30 மணிக்கு திரும்பி வந்து பார்த்தபோது எனது வண்டியை காணவில்லைஅக்கம் பக்கம் தேடிப் பார்த்தோம். எனது பைக் கிடைக்காததால் நான் பவானி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். காணாமல் போன எனது வண்டியின் மதிப்பு சுமார் 50,000ம் ரூபாய் இருக்கும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் அன்றைய தினம் இரவு சுமார் 8.30 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்து எனது பைக் பெருந்துறை அருகில் பிடித்து விட்டதாகவும், அந்த பைக் தற்போது காவல் நிலையத்தில் உள்ளதாகவும் அங்கு வந்து அடையாளம் காட்டுமாறும் கூறினார்கள். நான் காவல் நிலையம் சென்று எனது பைக்கை அடையாளம் காட்டினேன். பின்னர் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது பைக்கை பெற்றுக் கொண்டேன். அதற்கான புகைப்படம் அ.ச.பொ.1 ஆகவும், குறுந்தகடு அ.ச.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது புகாரை காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன் என்றால்

சரிதான். புகாரை நான் எழுதவில்லை அங்குள்ள காவலர்கள் தான் எழுதினார்கள் என்றால் சரிதான். நான் எனது வாகனத்தை கிடைத்து விட்டதாக போலீசார் என்னிடம் சொன்ன பின்பு நான் பெருந்துறை காவல் நிலையம் சென்று பார்த்தேனா அல்லது பவானி காவல் நிலையம் சென்று பார்த்தேனா என்றால் இரண்டு நாட்கள் கழித்து பவானி காவல் நிலையம் சென்று பார்த்தேன்.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.14 06:31:24 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

| CC No. | 164/2022 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | Lw2/Pw2- யுவராஜ் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 14.07.2025 |

**எதிரிகள் இருவரும் ஆஜர் இல்லை. எதிரிதரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பவானி மண் தொழிலாளர் வீதியில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 15.10.2020ஆம் தேதியன்று மதியம் சுமார் 2.00 மணியளவில் அ.சா.1 ராஜேந்திரன் எனது வீட்டிற்கு அவரது கருப்பு நிற Splendor பைக்கில் வந்து பைக்கை எனது வீட்டின் முன்னால் நிறுத்திவிட்டு, நானும் அவரும் எனது பைக்கில் வெளியில் சென்று விட்டோம். பின்னர் மாலை சுமார் 4 மணியளவில் திரும்பி வந்து பார்த்தபோது ராஜேந்திரனின் வண்டியை காணவில்லை. நாங்கள் அக்கம் பக்கம் தேடிப் பார்த்தோம். வண்டி எங்கும் கிடைக்காததால் ராஜேந்திரன் வண்டி காணாமல் போனது தொடர்பாக பவானி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 ராஜேந்திரன் எத்தனை மணிக்கு சென்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று விவரம் எனக்கு தெரியாது என்றால், சுமார் 4.00மணிக்கு மேல் சென்று கொடுத்தார். அ.சா.1ம், நானும் ஒரே விதியைச் சார்ந்தவர்கள் என்பதால், அ.சா1 கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் பொய் சாட்சிஅளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.14 06:31:38 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

| CC No. | 164/2022 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| Name | Pw-3 மகேந்திரன் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 14.07.2025 |

**எதிரிகள் இருவரும் ஆஜர் இல்லை. எதிரிதரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பவானி மேற்கு தெருவில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 15.10.2020 ஆம் தேதியன்று எனது உறவினர் ராஜேந்திரனின் என்பவரது பைக் காணவில்லை. அது தொடர்பாக நான் விசாரிப்பதற்காக அவர் பைக் காணாமல் போன யுவராஜ் என்பவரின் வீட்டிற்கு சென்றிருந்தபோது அன்றைய தினம் சுமார் 08.30 மணியளவில் அங்கு வந்த பவானி போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை செய்து மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.ச.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.14 06:32:05 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

| CC No. | 164/2022 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| Name | Lw6/Pw4 அரவிந்தன் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 14.07.2025 |

**எதிரிகள் இருவரும் ஆஜர் இல்லை. எதிரிதரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பவானி மண் தொழிலாளர் வீதியில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 15.10.2020 ஆம் தேதி அன்று ராஜேந்திரனின் என்பவரின் பைக் அ.சா. 2 யுவராஜ் வீட்டின் முன்னாள் நிறுத்தப்பட்டு இருந்தபோது திருட்டுப் போய்விட்டதாக கூறினார்கள். அது தொடர்பாக விசாரிப்பதற்காக நான் யுவராஜ் வீட்டிற்கு சென்றிருந்தபோது அங்கு வந்த போலீசார் அன்றைய தினம் இரவு சுமார் 8:30 மணி அளவில் சம்பவ இடத்தில் விசாரணை செய்து, பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால், நானும் மகேந்திரன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 ராஜேந்திரன் எனக்கு உறவினர் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டிருக்கனுங்க கையொப்பம் செய்தேன் என்றால் பைக் காணாமல் போனது சம்பந்தமாக கையொப்பம் கேட்டார்கள் கையொப்பம் செய்தேன்.

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.14 06:31:46 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.